

தாயுமானவரின்
உயிர் விளக்கம்
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம்.

# <u>தாயுமானவரின் உயிர் விளக்கம்</u>

உடல் உயிர் இரண்டிற்கும் வித்தே மூலம்
உட்பொருளே மெய்ப்பொருளாம் உண்மை தேர்வீர்.
உடல் என்ப தணுக்கள் பலசேர்ந்த கூட்டு
உயிர் என்பதோ அணுவின் நுண்துகள் ஆம்
உடல் ஊடே உயிர் சுற்றிச் சுழன்றியங்க
உணர்ச்சி யென்ற விளைவுண்டாம் அறிவு ஈதே
உடலை விட்டு உயிர் பிரிந்தால் அறிவங்கேது
உடல் வாழ்விற்குள் தான் இன்பம் துன்பம். - ஞா.க.1261

\- வேதாத்திரி மகரிஷி

Life a definition:
Almighty the source of physical body and
Life force; It is the Truth
Body is the combined activity of atoms
Life energy is its particles;
Emotion is the outcome of circulation of
Particles; wisdom realizes this.
Life energy departs the wisdom fail
Pleasure and pain goes. - Vethathiri Maharishi

உயிர் நம் உடலில் எந்த இடத்தில் இருக்கிறது?-
சித்தர்கள் கூறும் விளக்கம் !!!

தந்தை தாயின் வயிற்றில் இருந்து வெளிவந்து, இந்த மண்ணைத் தொட்டதும் அது அழுதே ஆகவேண்டும். இல்லையேல்
மற்றவர் அழத் தொடங்குவர்.

---

அழுகையே பிறக்கும் ஒவ்வருவரும் செய்யும் முதல் காரியம். குழந்தை அழும்போது முதல் முதலாக காற்று உடலின் உள்ளே புகுகிறது.

உயிரும் சுவாசத்துடன் கலந்து உள்ளே செல்கிறது. உள்ளே சென்ற உயிர் உடலில் எங்கே சென்று அமர்வதாக சித்தர்கள் கூறியிருக்கிறார்கள் என்று பார்ப்போமா?

"உச்சிக்குக் கீழே உண்ணாக்கு மேலே
வச்ச பொருளின் வகையறிவாரில்லை!" (திருமந்திரம் 309)

"உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே!" (திருமந்திரம் 197)

இவ்வாறு உச்சிக்குக் கீழே, உண்ணாக்கு மேலே உயிர் இருப்பதாக நம் சித்தர்கள் கூறுகிறார்கள்.

மேலும் அது 1008 இதழ்த் தாமரை மலரில் வீற்றிருப்பதாகக் கூறுகிறார்கள். அங்கே வீற்றிருந்தாலும் அதன் வடிவம் எத்தகையது என யாருக்காவது தெரியுமா என்றால் அதையும் கூறுகிறார்கள் நம் சித்தர்கள்.

"மேவி எழுகின்ற செஞ்சுடர் ஊடுசென்று" (- திருமந்திரம் 1777)

"ஜோதியே! சுடரே! சூழ் ஒளிவிளக்கே!" (- மாணிக்கவாசகர்)

"ஊனறிந்துள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்" -(திருமந்திரம் 1797)

"உற்றிந்து பாரடா உள் ஒளிக்கு மேல் ஒளி
அத்தனார் அமர்ந்திடம் அறிந்தவன் அனாதியே! " (- சிவவாக்கியர்)

இவ்வாறு அணுவுக்கு அணுவாக நீல நிற ஒளிவட்டமாக விளங்கும் சக்தியின் பீடத்தின் நடுவில் தீபச் சுடராக சிவம்

விளங்குகின்றது எனவும் அந்தத் தீப வடிவே உயிரின் வடு எனக் கூறப்படுகிறது.

இதையே திருமூலர் உயிர்தான் சிவலிங்கம்எனத் தெளிவாகக் கூறுகிறார்.

“தெள்ளத் தெளிவோர்க்குச் சீவன் சிவலிங்கம்” (- திருமந்திரம் 1823)

வடிவத்தைக் கூறிய நம் சித்தர்கள், உயிரின்அளவைப் பற்றி மட்டும் கூறாமலா விட்டிருப்பார்கள்.

ஒரு பசுவின் உடலில் இருந்து ஒரு மயிரை எடுத்து, அதை ஒரு லட்சம் பிரிவாக பிரித்தால் ,அதன் ஒரு பிரிவின் அளவே உயிரின் அளவாகுமாம். இதைக் கூறியது நம் திருமூலர்தான்.

நாம் யார்? உடலும், மனமும் மட்டும் தான் நாமா? எது இல்லாவிடின் வ்வுடல் இயக்கம் செயல்படாமல் நிற்கிறது?

எப்போது ஒருவர் இறந்து விட்டார் என்று கூறுகிறோம்? இறந்த உடன் எதோ ஒன்று இவ்வுடலை விட்டு பிரிகிறது அல்லவா!

அந்த எதோ ஒன்று இவ்வுடலில் இருப்பதால் தானே நம் உடல், மனம் செயல்படுகிறது. அது என்ன?

நமது ஞானிகள் இதை உயிர் என்றும் ஆன்மா என்றும் “ஜீவாத்மா” என்றும் குறிப்பிடுகின்றனர்.

---



இவ்வுயிர் அழிவற்றது என்றும் நாம் யார் என்ற கேள்விக்கு "நாம் என்பது" நம் உடலில் தங்கியுள்ள உயிர் அதாவது ஜீவாத்மா தான் நான் என்று குறிப்பிடுகின்றனர்.

இவ்வுயிரை அறிந்து , தெரிந்து, உணர்ந்தாலே நாம் யார் என்பதை தெளிவாக முற்றிலும் உணர முடியும்.

இவ்வுயிரை அறிய முதலில் இவ்வுயிர் நம் உடலில் எங்கு இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

எங்கு இருக்கிறது என்று தெரிந்தால் தான் நாம் உடலில் அங்கு சென்று அதை உணர முடியும்.

நம் உயிர் உடலில் எங்கு இருக்க முடியும் என்பதை முதலில் நமது சிற்றறிவால் சிந்தனை செய்து அறிவோம்?

---

அதன் பின் நம் அடைந்த முடிவை ஞானிகளின் பாடல்களின் மூலம் உறுதி செய்து கொள்வோம்.

உயிரின் தன்மை என்ன என்று தெரிந்து கொண்டு பின் அது எந்த இடத்தில் இருக்கும் என்று பார்போம்.

உயிரின் தன்மை அறிய இறந்த உடலுக்கும் உயிர் தங்கியுள்ள உடலுக்கும் உள்ள வித்தியாசத்தை கொண்டு பார்போம்.

எல்லா உயிர் உள்ள மனித உடலும் ஒரு குறிப்பிட்ட அளவு வெப்பம் உள்ளதை அறியலாம்.

இறந்த உடலில் இவ்வெப்பம் இல்லாமல் குளிர்ந்து போய் இருப்பதை நாம் பார்க்கலாம்.

அதனால் உயிரின் ஒரு தன்மை வெப்பம் (அ) ஜோதி என்று அறிந்து கொள்ளலாம்.

ஆன்மா ஜோதி மயமானது என்ற ஞானிகளின் கூற்றின்படி உயிரின் மற்றொரு தன்மை ஒளி என்பதை அறியலாம்.

இவ்விரு முக்கியமான தன்மையினை கொண்டு உயிர் இருக்ககூடிய இடத்தை ஆராய்வோம்.

முதல் படியாக ஒரு மனிதன் எந்த உறுப்பு இல்லாமல் உயிர் வாழ முடியாது என்பதை பார்போம்? கை, கால் இல்லாமல் உயிர் வாழ முடியும்.

நம் உடலில் இருதயம் கூட இல்லாமல் ஒரு கருவியின் உதவி கொண்டு நாம் உயிர் வாழ்கிறோம். இதனால் இவ்வுருப்புகளில் உயிர் இல்லை என நாம் முடிவு செய்து கொள்ளலாம்.

---

தலை இல்லாமல் மனிதன் உயிர் வாழ முடியாது. தலையே உடலில் பிரதான உறுப்பாக இருக்கிறது.

"எண் சான் உடம்பிற்கு சிரசே பிரதானம்" என்பது சித்தர்கள் வாக்கியம்.

இதிலிருந்து உடலில் உயிர் தலையில் தான் இருக்கிறது – இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது அல்லவா?

நமது தலையில் எங்கு உயிர் இருக்க முடியும்? ஒரு சிறு உதாரணம் கொண்டு இதை ஆராய்வோம்.

நமது தலையினை ஒரு அறையாக பாவிப்போம். ஒரு விளக்கினை (ஒளி) ஏற்றி நடுஅறையில் வைத்தால் தான் அவ்விளக்கின் ஒளி சமமாக எல்லா இடங்களுக்கும் பரவும்.

அது போலவே நமது உயிரானது சிரசின் நடுவில் அதாவது தலையின் உள் நடுவில் இருந்தால் தான் உயிர் ஆற்றல் தலையில் உள்ள ஐந்து உறுப்புகளுக்கும் சமமாக ஆற்றல் கொடுக்கும்.

அதனால் நமது சிந்தனையின் படி தலையின் நடுவில் தான் உயிர் இருக்க வேண்டும் என்று புலனாகிறது. நமது இந்த முடிவை ஞானிகளின் பாடல்களை கொண்டு சரியா என்று பார்போம்.

திருமூல நாயனார் தமிழ் மறையான திருமந்திரத்தில் அப்பட்டமாக இந்த ஞான இரகசியத்தை கூறியுள்ளார்.

நமது சிரசில் இருந்து உச்சியிலிருந்து ஒரு நாடி கீழே இறங்குகிறது! அது நமது கண், காது, மூக்கு உள்ளே சேரும் மத்தியில் , வாயின் உள் அண்ணாகுவின் சற்று மேல் வந்து நிலை கொண்டு , அங்கிருந்து இருநாடியாக பிரிந்து இரு கண்களில் வந்து சேர்கிறது. இவ்விடமே சிரநடு.

மற்றுமொரு சித்தர் "உச்சிக்கு கீழ் அண்ணாவுக்கு மேல் அணையா விளக்கு நித்தம் எரியுதடி ஞான பெண்ணே" என்று உயிர் உள்ள இடத்தை சுட்டி காட்டுகிறார்.

இதன் மூலம் உயிர் உள்ள இடம் நமது தலை மத்தி என்று புலனாகிறது.

அடுத்தாக தலையின் நடுவில் உள்ள உயிரை எவ்வாறு சென்று அடைவது என்று பாப்போம்.

இது மிகவும் எளிது. நமது தலையில் உள்ள எந்த உறுப்பில் ஒளி துலங்குகிறது?

கண் அல்லவா?

ஆம் கண்ணே நமது ஜீவ ஒளியினை பிரதிபளிக்கிறது.

ஒளியாக உள்ள அந்த இறைவனின் அம்சமான உயிரை – ஒளியை கொண்டே தான் அடைய முடியும்.

அதனால் கண்களே நாம் நமக்குள் உட்புகும் வாசல். கண் ஒளியே இறைவன் திருவடி.

மெய்யான ஒளியினை தாங்கி உள்ளதால் கண்ணே மெய்பொருள். இறைவன் திருவடியான கண்களை பிடித்தாலே நம்மை அறிந்து இறைவனை அறிய முடியும்.

கண்ணை பற்றி பாடாத ஞானிகளே இல்லை எனலாம். பரிபாசையாக , நேரடியாக, குறிப்பாக கண்ணையே ஞானிகள் , இறைவனை அடையும் வழி என்று கூறி உள்ளனர்.

கண்ணை பற்றி சொல்லியுள்ள சில ஞானிகளின் பாடல்களை பாப்போம்.

## இயேசு கிறிஸ்து:

“தேவன் ஒளியாக உள்ளான், நீ ஒளியிலே நடந்தால் தேவனை தரிசிக்கலாம்”. “கண்ணே சரிரத்தின் விளக்கு. உன் கண்கள் ஒளி மிகுந்ததாக இருந்தால் உன் உடல் ஒளி மிக்கதாக இருக்கும்” - இதுதான் மூலம் நம் கண் ஒளியை பெருகி அந்த ஒளியில் உள் நடந்து தேவனை தரிசிக்க வேண்டும் என்று தெளிவாக கூறி விட்டார்.

## திருநாவுக்கரசர்:

“காளத்தியான் அவன் என் கண்ணில் உள்ளான் காண்”

## அபிராமி பட்டர்:

“மணியே , மணியின் ஒளியே, ஒளியின் உணர்வே, அணுகாதவர்க்கு பிணியே, பிணிக்கு மருந்தே” என்று கண்மணியில் ஒளியை நாம் பற்ற வேண்டும் என்று பாடியுள்ளார்.

## வள்ளலார்:

“காணும் கண்களுக்கு காட்டும் ஒளியாய்,
காட்டும் ஒளிக்கு காட்டுவிக்கும் ஒளியாய்
பூணும் திருவடிகள்”

திருவருட்பாவில் பல பாடல்களில் திருவடி கண்களே என்று இதை வெளிச்சமாக்கி காட்டி உள்ளார்.

## திருவள்ளுவர்:

“பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் ,
மற்றவைகளில் நிலையாமை காணப்படும்”

கடவுள் வாழ்த்து பகுதியில் பத்து பாடல்களில் ஏழு பாடல்களில் அடி என்று குறிபிடுகிறார்.

## கண்ணன்

கண்ணன் என்ற வார்த்தை குறிப்பது கண்ணில் உள்ளவன் அவன் என்பதே. கிருஷ்ண மணி என்று நாம் நம் கண்மணியையே குறிப்பிடுகிறோம்.

கண்மணியில் , கிருஷ்ணமணியில் பெரும் உணர்வே கிருஷ்ண உணர்வு.

## கடோபநிசத்தில்

நசிகேதன், மனித தேகத்தில் இறைவன் இருக்கும் இடம் யாது என எமதர்மரஜனிடம் வினவ, அதற்கு எமன், இறைவன் கட்டை விரல் அளவான இடத்தில் புகை இல்லாத ஜோதியாக விளங்குகிறான் என்று பதில் கூறுகிறார்.

இதுவே ஆதாரம் இதற்கு? நம் உடலில் கட்டைவிரல் அளவான இடம் என பரிபாசையாக கூறப்பட்டது நமது கண்ணையே.

பேரொளியான அருட்பெரும் ஜோதியான இறைவன் புகையில்லாத ஜோதி.

நம் கண்மணி உள் இருக்கும் சுயம் ஜோதி. எவ்வளவு பெரிய ஞான இரகசியம். இது தெரிந்தால் தானே தட்சிணாமூர்த்தி உணர்த்தியது போல கண்ணை திறந்து சும்மா இருந்து தவம் செய்ய முடியும்.

ஆதி குரு தட்சிணாமூர்த்தியும் மோன உபதேசமாக இதையே தெரிவிக்கிறார்.

சும்மா இரு என்று சனகாதி முனிவர்களுக்கு உபதேசித்து நாம் சும்மா இருக்க வேண்டிய இடம் – அதாவது நமது மனதை நிறுத்த வேண்டிய இடம் நம் கண்மணியிலே – கண் ஒளியிலே என்று உணர்த்தி உள்ளார்.

## சித்தர் சிவவாக்கியர் :

“வலது கண் சூரியன் , இடது கண் சந்திரன்”
என நேரடியாக குறிபிடுகிறார்.

## பகவத் புராணத்தில்

இறைவன் இருதயத்தின் உள் உள்ளார் என்று தெரிவிக்க பட்டு உள்ளது. இருதயம் என்பது = இரு + உதயம். நமது இரு கண்களே சூரியன் , சந்திரன் உதயமாகும் இடம்.

ஆம் நமது உடலில் வலது கண் சூரியன் , இடது கண் சந்திரன்.நாம் கோவிலுக்கு சென்று ஆண்டவனுக்கு கற்பூரம்
காட்டி நமது கண்களிலேதான் வைத்து கொள்கிறோம்.
8 , 2 ,
சூரியன் , சந்திரன்,
அ, உ,
சக்கரம், சங்கு என்று குறிபிட்டுள்ள அனைத்தும் வலது கண்ணையும், இடது கண்ணையும் தான் குறிக்கும்.

---

## உயிர் பற்றி மற்றவர்கள் பார்வை

இயற்பியலாளர்களான, ஜான் பர்னல், எர்வின் சுரோடிங்கர், இயூஜீன் விக்னர், ஜான் அவெரி ஆகியோரின் கருத்துப்படி,

உயிர்வாழ்க்கை என்பது, சூழலிலிருந்து பொருட்களையோ அல்லது ஆற்றலையோ எடுத்துக்கொண்டு தமது உள்ளார்ந்த ஆற்றல் குறைவை ஈடுகட்டிக்கொள்ளும் திறன் வாய்ந்த, திறந்த அல்லது தொடர்ச்சியான நிகழ்முறைமையாகும்.

உயிரானது பின்னர் தான் உள்வாங்கிக்கொண்டவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவிடுகிறது.

## வேதாத்திரி மகரிஷி பார்வையில் உயிர்

உடலின் மிக நுட்பமாகச் சுழன்றோடும்அரூபமான இயக்கமே உயிர் எனப்படுகிறது. இந்த உயிர் என்பது பல கோடி விண்துகள்களின் தொகுப்பாகும்.

உயிர் என்பது மனித உடலுக்குள் கோடிக் கணக்கான விண்துகள்கள் தற்சுழற்சி பெற்று உடல் முழுவதும் சுழன்று ஓடுவதாகும்.


உயிர் என்னும் ஆன்மா தோற்றமும் அன்னை, தந்தையருக்கு முன்பே ஆரம்பிக்கின்றது. உயிர் மனிதருள் உணர்ந்து விளங்கப்பட வேண்டியதாகும்.

பருஉடலில் , வேரணுக்களில் அடங்கியுள்ள அணுக்களின் எண்ணிக்கை கூடுதல், குறைதல் இவற்றால் தனிதனியே இயங்கும் அணுக்கள் பரு உடல் முழுவதிலுமே ஊடுருவி சுழன்றோடிக் கொண்டிருக்கினறன.

இதுதான் நுண்ணுடல் (அ) உயிர் என்பது. இந்த உயிரைப் பற்றி மகரிசி,

“விண்ணென்ற நுண்ணனுதான் உடலுக்குள்ளே விரைந்தாற்றும் உயிராம்.......”






என்பர்.

## தாயுமானவர் தரும் உயிர் விளக்கம்

**தாயுமானவர் பாடல்களில் உயிரின் தன்மை பற்றி எண்ணங்கள் மிகுதியாக இல்லை. மலரின் மனம், எள்ளில் எண்ணெய், உடலில் உயிர் என அமைக்கிறார்.”**

**“சொல்லறிய உயிரிடை” என உயிரைச் சொல்லுதற்கு விரித்தற்கு அரியதாகவே படைக்கின்றார்.**

**“இகபரம் இரண்டினும் உயிரினுக்கு உயிராக எங்கும் நிறைகின்ற பொருளே” எனவும் இறைவன் உயிருக்கு உயிராக இருக்கின்றான் என்பதை ஏறத்தாழ 70 இடத்திலும் பேசுகின்றார். ஆவியை இறைவனுக்கு நைவேத்திமாக அளித்தல் வேண்டும்**

---

**உயிர் எல்லாக் காலங்களிலும் இறைவனோடு இரண்டறக் கலக்கும் வரைச் செயல்படுகின்றது.**

## தாயுமானவர் பார்வையில் உயிரின் இயக்க நிலை.

**சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரீயாதீதம் என்று ஐந்து நிலைகளிலும் எந்த எந்தக் கரணங்கள் எவ்வெவ்வாறு செயல்படுகின்றன என்பது பற்றித் தாயுமானவர் தரும் இரண்டு பாடல்கள் உயிர் இயக்க நியையினை சுட்டுகின்றது எனலாம்.**

ஜாக்கிரமா நுதலினில், இந் திரியம் பத்தும்,
சத்தாதி. வசனாதி, வாயு பத்தும்,
நீக்கமில் அந் தக்கரணம், புருஷ னோடு,
நின்றது முப் பான்ஐந்து, நிலவும் கண்டத்
ஆக்கியசொப் பனம். அதனில் வாயு பத்தும்,
அடுத்தக சத்து ஆதி, வச னாதி ஆக
நோக்குகர ணம்புருடன் உடனே கூட,
நுவல்வர்இரு பத்தைந்தாம் நுண்ணி யோரே. (ஆசை எனும்.25.)

புருவநடுவில் உயிர் நினிறு தொழிற்படுவது நனவு நிலை எனப்படும். அதற்குரிய தத்துவங்கள் முப்பத்தைந்து. அவையானவன.

- அறிவுக் கருவிகள் ஐந்து.
- தொழிற்கருவிகள் ஐந்து ஆக இந்திரியம் பத்தும்.
- சத்தம் முதலியாகச் சொல்லப்பட்ட அறிவுப் புலன்கள் ஐந்தும்.
- வசனம் முதலாகச் சொல்லப்பட்ட தொழிற்புலன்கள் ஐந்தும்.
- வாயுக்கள் பத்தும்.
- அகக்கருவிகள் நான்கும்.
- புருடன் ஒன்றும் ஆக முப்பத்தைந்து.

---

கழுத்தில் உயிர் நின்று தொழிபடுவது கனவுநிலை என்படும். அதற்குரிய தத்துவங்கள் இருப்பத்தைந்து. அவையாவன.

- வாயு பத்தும்.
- சத்தம் முதலிய அறிவுப் புலனகள் ஐந்தும்.
- வசனம் முதலிய தொழிபுலன்கள் ஐந்தும்.
- அகக்கருவிகள் நான்கும்
- புருடன் ஒன்றும் ஆக இருபத்தைந்து

நுண்ணறிவடையோர் கனவு, நனவு குறித்து இவ்வாறு கூறியுள்ளனர்.

கழுத்தி இதயம்தனில் பி ராணம், சித்தம்,
சொல்லரிய புருஷனுடன் மூன்றது ஆகும்.
வழுத்திய நாபியில் துரியம் பிராண னோடு
மன்னுபுரு ஷனும் கூட வயங்கா நிற்கும்,
அழுத்திடுமூ லம் தன்னில் துரியா தீதம்
அதனிடையே புருஷன் ஒன்றி அமரும். ஞானம்
பழுத்திடும் பக் குவர் அறிவர் அவஸ்தை ஐந்தில்
பாங்குபெறக் கருவிநிற்கும் பரிசு தானே. (ஆசை எனும்.26.)

உறக்க நிலையில் இதயத்தானத்தின் பிராணன், சித்தம், புருடன் ஆகிய மூன்று தத்துவங்கள் தொழிற்படும்.

பேருறக்க நிலையில் (துரியம்) தொப்புளில் பிராணனும் புருடனும் ஆக இரண்டும் தத்துவம் தொழிற்படும்.

உயிர்ப் படங்கல் (துரியாதீதம்) நிலையில் மூலாதாரத்தில் பருடனன மட்டுமே நிற்கும்.

ஞானம் முதிரப்பெற்ற பரிபக்குவ நிலையுடையோர் இவற்றை அறிவர். அவத்தை ஐந்திலும் உண்மையான நிலையில் கருவிகள் நிற்கும் தன்மை இதுதான்.



## உயிரின் விளக்கம் வேதாத்திரியத்தில்

- உயிர் எனும் சக்தி உணர்ச்சியில் மனமாய் ஒடுங்கி தன்மூலம் உணர்ந்திடப் பரமாய்.
- உயிர் என்பதோ அணுவின் நுண்துகள் ஆம்.
- உயிர் என்பது பிரபஞ்சத்த தோற்றங்கள் அனைத்திற்கும் அடிப்படையான இயக்க மூலக்கூறு ஆகும்.

---

- உயிர் - பரம் - அறிவு ஒன்றே பொருளால் உணர்வு ஒழிவு நிலைகளில் மாறுதல்.
- உடல் ஊடே உயிர் சுற்றிச் சுழன்றியங்க உணர்ச்சியென்ற விளைவுண்டாம். அறிவு ஈதே.
- காந்தமே ஒலி - ஒளியாய்த் திகழ்தல்போல கண்காணா
- உயிர் அறிவாம் ஆற்றலும் ஆம். கண்காணா உயிர் அறிவாம் ஆற்றலும் ஆம்.
- ஒவ்வொரு உயிரும் தெய்வத்தின் திருவிளையாட்டரங்கம்.
- உன்னிலே பெரிதென உணர். இன்பதுன்பங்கள் என்னிலும் எல்லா உயிரிலும்உள்ளதுணர்.
- தெய்வநிலை உணர்ந்து, பிறவி ஒழித்து முக்தி பெறுவது உயிர்தான் - உடல் அல்ல.
- பரிணாமத் தத்து முறையில உயிரற்ற பொருளிலிருந்துதான் முதலில் உயிர் தோன்றியது.
- உயிர்ச்சக்தியின் இயக்க விளைவுதான் எண்ணம். அது அறியும் திறனுடையதால் அறிவென்றும கூறப்படுகிறது.
- காந்தமே - ஒளியாய்த் திகழ்தல் போல - கண் காண உயிர் அறிவாய் ஆற்றலும் ஆம்.
- அண்டத்தில் கடவுள் என அழைக்கப்படுபவன் பிண்ணத்தில் உயிர் எனப் பேசப;டுகிறான்.

**“இகபரம் இரண்டினும் உயிரினுக்கு உயிராக எங்கும் நிறைகின்ற பொருளே” எனவும் இறைவன் உயிருக்கு உயிராக இருக்கின்றான் என்பதை ஏறத்தாழ 70 இடத்திலும் தாயுமானவர் பேசுகின்றார். எனவே நம் உயிருக்கு உயிராக இருக்கும் இறைவனை இமைப்பொழுதும் நீங்காமல் வழிபடுவோமாக!**

